**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.35/2024 - PW-11**

| | |
|---|---|
| Name | திரு. பாலகிருஷ்ணன் |
| Husband/Father Name | நாராயணன் |
| Village /Area | முருங்கை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | விவசாயம் |
| Age | 32 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 03.09.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு எனது அண்ணன் மகன் பன்னீர்செல்வம் எனக்கு சொந்தமான ஸ்விப்ட் டிசயர், பதிவு எண் TN 73 Z 3481 என்ற காரை மருத்துவமனைக்கு சந்தானம் என்பவரை அழைத்து செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில் நான் காரை கொடுத்தேன். மறுநாள் கேட்ட போது மேற்படி பன்னீர் செல்வம் சந்தானம் இறந்துவிட்டாதாக கூறினார். ஆஜர் எதிரிகளுக்கும் இறந்த சந்தானம் என்பவருக்கும் சண்டை என்று ஊரில் பேசிக்கொண்டார்கள். ஆஜர் எதிரிகள் எனது ஊர்காரர்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாம் கையொப்பம் என்னுடையது தான். அவைகள் முறையே **அதசாஆ.3** முதல் **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாம் கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.6**

மற்றும் **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்தல் என்னிடம் காண்பிக்கப்படும் கரடு முரடான சிறிய கல்லை போலீசார் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.03 17:36:38 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.